C 8129364

**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District / மாவட்டம் : திருவாரூர் PS / காவல்நிலையம் : Under Section 173 BNSS V&AC Year / ஆண்டு : 2025 FIR No. / மு.த.அ. எண் : 1/25 Date / நாள் : 02/4/2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Act 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   18.3.2025 - 12.00 Hrs மன்னார்குடி ஆனந்தவிநாயகர் கோயில்
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   26-3-2025 - 15.00 Hrs திருக்கொள்ளிக்காடு - கோயில்
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் D/R Time : நேரம்
   28.3.2025 - 11.30 Hrs மன்னார்குடி ஆனந்த விநாயகர் கோவில்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02-4-2025/15.00 Time : நேரம்
   2.4.2025 - 11.00 Hrs - மன்னார்குடி ஆனந்த விநாயகர் கோவில்
   FIR - 02.4.2025 - 17.00 Hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் டைப் செய்யப்பட்ட

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 4 கி.மீ
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி செயல் அலுவலர் அலுவலகம் - மன்னார்குடி ஆனந்த விநாயகர் கோவில் 25 கி.மீ மேற்கு
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சசிகுமார்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49/2025
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் திருக்கொள்ளிக்காடு கோவில் எழுத்தர்
   (g) Address : முகவரி 2/98, கீழத்தெரு, செம்பிய வேளூர், திருக்குவளை, தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. ஜோதி, செயல் அலுவலர், திருக்கொள்ளிக்காடு அ/மி அக்னீஸ்வரர். திருக்கோயில். திருவாரூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் B.V.நந்தகோபால் ஆகிய நான் 02.04.2025ஆம் தேதி 15.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது திரு.M.சசிகுமார் வயது 49, த/பெ முத்துசாமி, 2/98 கீழத்தெரு, செம்பியவேலூர், திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் என்வர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: திரு.M.சசிகுமார் வயது 49, த/பெ முத்துசாமி, 2/98 கீழத்தெரு, செம்பியவேலூர், திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம். பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். ஐயா, நான் திருக்குவளை தாலுக்கா, செம்பியவேலூரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் BA வரை படித்துள்ளேன். நான் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் திருவாரூர் மாவட்டம், திருக்கொள்ளிக்காடு, அ/மி அக்னீஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 01.10.2008 முதல் தற்காலிக கணக்கராக பணிக்கு சேர்ந்தேன். கடந்த 18.02.2015-ல் பணி நிரந்தரம் செய்யப்பட்டு அதே கோயிலின் எழுத்தராக தொடர்ந்து பணிபுரிந்து வருகிறேன். நான் தற்போதுவரை 5-வது ஊதியக்குழு பரிந்துரையிலான ஊதியம் பெற்று வருகிறேன். 6 மற்றும் 7-ஆம் ஊதியக்குழு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

02/4/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

02.04.2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. NANDAGOPAL
Rank: நிலை DSP No. எண் VAAC, Thiruvarur.

3

பரிந்துரையின் படி எனக்கு ஊதியம் கடந்த மார்ச் 2025ஆம் மாதம் வரை மாற்றப்படாமல் இருந்தது. கடந்த 2022ஆம் ஆண்டு முதல் திருக்கொள்ளிக்காடு அ/மி அக்னீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலராக திருமதி.ஜோதி என்பவர் பணிபுரிந்து வருகிறார். இவர், மன்னார்குடி அ/மி ஆனந்த விநாயகர் திருக்கோயில் செயல் அலுவலராகவும் கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார். நான் கடந்த ஜனவரி மாதம் இறுதியில் அலுவலக பணி சம்பந்தமாக செயல் அலுவலர் ஜோதி அவர்களை மன்னார்குடி அ/மி ஆனந்த விநாயகர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்திற்கு சென்று பார்த்தேன். அப்போது அவரிடம் நான் 2015 முதல் 5வது ஊதியக்குழு பரிந்துரையிலான ஊதியம் பெற்று வருகிறேன் என்றும், இதனால் பொருளாதார ரீதியாக சிரமமாக இருப்பதால் எனக்கு முதலில் 6வது ஊதியக்குழு பரிந்துரையிலான ஊதியத்திற்காவது மாற்றம் செய்து அதற்கான நிலுவை தொகையினை வழங்குமாறு கோரினேன். அதற்கு செயல் அலுவலர் ஜோதி, எனக்கும் எங்கள் கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர் திரு.சிவக்குமாருக்கும் சேர்த்து ஊதியம் மாற்றி ஊதிய நிலுவைத் தொகை வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்று தெரிவித்தார். பின்னர் 18.03.2025ஆம் தேதி காலை சுமார் 12.00 மணியளவில் மீண்டும் அலுவலக பணி சம்மந்தமாக மன்னார்குடி அ/மி ஆனந்த விநாயகர் திருக்கோயிலில் EO மேடத்தை சென்று பார்த்தேன். அப்போது செயல் அலுவலர் ஜோதி, தங்களுக்கும், அர்ச்சகருக்கும் 6-வது ஊதியக்குழு தொடர்பான ஊதிய நிலுவைத்தொகை கணக்கிட்டு பட்டியல் தயாராகிவிட்டது, அதன்படி தங்களுக்கு ரூ.2,86,792/- ஊதிய நிலுவை தொகை என்று தெரிவித்தார். இதில் முதல் தவணையாக ரூ.2,00,000/-ஐ செக்காக வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்றும், அவ்வாறு வழங்கும் தொகையில் தனக்கு பாதி தொகையை அதாவது ரூ.1,00,000/-ஐ லஞ்சமாக என்னிடம் கேட்டார். பின்னர் 26.03.2025ஆம் தேதி 15.00 மணியளவில் செயல் அலுவலர் ஜோதி திருக்கொள்ளிக்காடு கோயிலுக்கு அன்னதான உண்டியல் எண்ணும் பணிக்காக வந்தார். அப்போது அலுவலகத்தில் இருந்த என்னிடம் ஊதிய நிலுவை தொகைக்கு ஏற்கனவே அவர் கேட்ட லஞ்சப்பணம் குறித்து கேட்டார். அப்போது நான் பார்த்து குறைத்து சொல்லுங்க மேடம் என்று தெரிவித்தேன். அதற்கு EO மேடம் நான் கேட்ட பணத்தை கொடுக்கவில்லை என்றால் இந்த வேலைய கிடப்பில் போட்டு விடுவேன் என்று கூறினார். பின்னர் EO மேடம் எனக்கு ஊதிய நிலுவை தொகை வழங்க ரூ.1,00,000/- லஞ்சப்பணத்தை தன்னிடம் கொண்டுவந்து கொடுக்குமாறும், இருவருக்கும் ஊதிய நிலுவை தொகை வழங்க தீர்மான புத்தகத்தில் தீர்மானம் எழுதி மன்னார்குடி அ/மி ஆனந்த விநாயகர் கோயில் அலுவலகத்திற்கு எடுத்துவருமாறு என்னிடம் தெரிவித்தார். அதன்படி தீர்மான புத்தகத்தில் எனக்கும், சிவக்குமாருக்கும் ஊதிய நிலுவைத் தொகையில் ஒருபகுதியாக தலா ரூ.2,00,000/- வழங்குவதற்கு இரண்டு தீர்மானங்கள் எழுதி எடுத்துக் கொண்டு 28.03.2025-ஆம் தேதி சுமார் 11.30 மணியளவில் மன்னார்குடி அ/மி ஆனந்த விநாயகர் கோயில் அலுவலகத்திற்கு சென்று அலுவலகத்தில் இருந்த செயல் அலுவலர் ஜோதியிடம் தீர்மான புத்தகத்தை கொடுத்தேன். அதனை EO மேடம் பார்த்துவிட்டு கையொப்பம் செய்துவிட்டு அவர் கையில் வைத்திருந்த திருத்துறைப்பூண்டி, CUB வங்கி காசோலை எண். 000193 மற்றும் 000194 ஆகியவற்றில் தலா ரூ.2,00,000/- கான தொகைக்கு செக்போட்டு கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்து கோயில் முதல் வங்கி கணக்கு எண்.SB 257001001787143-லிருந்து, எனக்கு கொடுப்பதற்காக கோயிலின் இரண்டாவது வங்கி கணக்கு எண். SB 257001001787144-க்கு மாற்றம் செய்து வைக்க கூறிவிட்டு, உனக்கு நிலுவை தொகை வழங்க செக் வழங்க வேண்டுமென்றால் எனக்கு ரூ.1,00,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும்

என்று மீண்டும் கூறினார். அதற்கு நான் தற்போது தாங்கள் கேட்ட பணத்தை தயார் செய்ய இயலாத நிலையில் உள்ளேன், சற்று குறைத்து கொள்ளுமாறு தெரிவித்தேன். அதற்கு EO மேடம் நான் கேட்ட பணத்தை தரலன்னா செக் தர முடியாது, உன் நிலைமைய பாத்து, நான் சொல்றமாறி கேளு, முதல்ல நீ செக் வாங்கி பேங்க்ல போட்டுட்டு, பணத்தை எடுத்து எனக்கு கொடுக்க வேண்டியதை கொடு, வேற எதுவும் பேசாத, இதுல ஏதாவது தவறுனா ஆக வேண்டிய வேல நெறைய இருக்கு, மீதி அரியர் பணம், அப்பறம் இன்னொரு அரியர் போடணும், அத கவனத்துல வெச்சி நான் கேட்ட பணத்தை செக்-அ வாங்கி மாத்திட்டு சைலண்டா கொடுத்துட்டு போயிடு என்றார். மேலும் EO மேடம் சொன்னதின் பேரில் அன்றைய தினமே தக்கார் முருகையனிடமும் தீர்மான புத்தகம் மற்றும் காசோலைகளிலும் கையொப்பம் பெற்று வந்தேன். 02.4.2025ஆம் தேதி காலை EO மேடம் என்னுடன் பணியாற்றும் குபேந்திரனுக்கு போன் செய்து என்னை மன்னார்குடி வரச்சொன்னார். அதன்படி காலை சுமார் 11.00 மணிக்கு EO மேடத்தை மன்னார்குடி அ/மி ஆனந்த விநாயகர் கோயில் அலுவலகத்திற்கு சென்று பார்த்தேன். அப்போது EO மேடம் நான் கேட்ட பணம் ரெடியாகிட்டா என மீண்டும் கேட்டார். நான் பணத்தை குறைத்து கொள்ளுமாறு கேட்டேன், அதற்கு அவர் தொலைச்சிபுடுவேன், நான் செக் போட்டுட்டேன், உன்னை நம்பிதான் செக்க கொடுக்குறேன், நீ செக்க மாத்திட்டு நான் ஏற்கனவே கேட்ட ரூ.1,00,000/- பணத்தை மன்னார்குடி ஆனந்த விநாயகர் கோயில் அலுவலகத்திற்கு நாளைக்கு காலையில வந்து கொடுத்துடு, அப்பதான் நான் உனக்கு மீதி பணத்தையும், 7வது பே-கமிஷன் சம்பளத்தையும் மாத்தி கொடுக்க முடியுமுன்னு கறாரா சொல்லிவிட்டார். மேலும் குருக்கள் சிவக்குமாருக்கு உள்ள செக்கையும் என்னிடம் கொடுத்து அலுவலகத்தில் வைத்துக்கொள், குருக்களை என்னிடம் பேச சொல்லு என்று தெரிவித்தார். நான் கஷ்டப்பட்டு வேலை பார்த்த சம்பள பணத்தை பெறுவதற்கு EO மேடத்துக்கு லஞ்சப்பணம் கொடுக்க என் மனசு ஒத்துக்கல. அதனால நான் 02.04.2025 மதியம் சுமார் 1 மணியளவில் EO மேடம்வழங்கிய செக்குடன் திருத்துறைப்பூண்டி CUB Bank சென்று கலக்ஷன் போட்டு எடுத்த பணத்தில் EO மேடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.1,00,000/-ஐ எடுத்துக்கொண்டு EO மீது நடவடிக்கை எடுக்க புகார் தயார் செய்துகொண்டு திருவாரூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து, புகார் அளிக்கிறேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட EO திருமதி. ஜோதி மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நிலுவைத் தொகை கணக்கீட்டு தாள் நகல், நிலுவை தொகை விடுவிப்பு செய்வதற்கு போடப்பட்ட தீர்மானம் நகல், கோயில் முதல் வங்கி கணக்கு எண்ணிலிருந்து இரண்டாவது வங்கி கணக்கு எண்ணிற்கு தொகை மாற்றம் செய்ய வழங்கிய காசோலை எண்.000193 மற்றும் 000194 ஆகியவற்றின் நகல்கள், எனக்கு ரூ.2,00,000/- வழங்கிய செக் எண். 001658-ன் நகல், 02.4.2025 அன்று CUB திருத்துறைப்பூண்டி வங்கியிலிருந்து ரூ.2,00,000/- எடுத்ததற்கான Withdrawal Challan ஆகியற்றை இத்துடன் இணைத்து வழங்குகிறேன். Sd. (xxxxxxxxx) M.சசிகுமார்2.4.2025, அய்யா, இன்று 2.4.2025ஆம் தேதி 15.00 மணிக்கு வாதியிடமிருந்து மேற்காணும் தமிழ் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினைப் பெற்று ஒரு ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதில் புகாரின் தன்மை உண்மை எனவும், எதிரியின் நடவடிக்கை சர்ச்சைக்குரியது என்றும் ரகசிய விசாரணையில் தெரியவருகிறது. எனவே 2.4.2025ந் தேதி 17.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/2025 ச/பி 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018-ன் படி எதிரி EO

திருமதி.ஜோதி மீது வழக்குபதிவு செய்யப்பட்டது. SD (XXXXX) 02.4.2025 B.V.நந்தகோபால், DSP, V&AC, Thiruvarur.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

B.V.Nandagopal 02/4/25

Deputy Supdt. of Police,
Vigilance and Anti Corruption,
THIRUVARUR.